ඇමුණුම 04

# கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் கருமங்கள்

# கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் செயற்பாடுகள்

## கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் பணிகள் :

உங்கள்

- வீட்டாதனம்
- தோட்டங்கள், அல்லது
- மேட்டுநில, தாழ்ந்த பிரதேச கமத்தொழிற் காணிகள்

என்பவற்றை ஈடுவைத்ததன்மீது அல்லது நிபந்தனையுடன் கைமாற்றியதன் மீது திரட்டப்பட்ட ஒரு கடனைத் திருப்பிக் கொடுப்பதில் உங்களுக்குப் பிரச்சினையொன்று இருப்பின் உங்கள் பிரச்சனையின் பாரதூரமான தன்மையைப் பொருட்படுத்தாது கடன் இணக்க சபைத் திணைக்களம் உங்களுக்கு எப்பொழுதும் உதவத் தயாராக உள்ளது. அவசர பணத் தேவை ஏற்படும் நேரங்களில் தமது ஆதனங்களை அடைமானம் வைத்து அல்லது நிபந்தனையுடனான கைமாற்றியதன்மீது எந்த மிதமிஞ்சிய வட்டி வீதத்திலும் எந்த நிபந்தனையின் மீதும் பணத்தைப் பெற்றுக் கொண்ட போதிலும் அந்த அடைமானம் அல்லது நிபந்தனையுடனான கைமாற்றுதலின் கால எல்லை விஞ்சுவதற்கு முன் பணத்தைச் செலுத்தி ஆதனத்தைத் திருப்பிக் கொள்ள முடியாமையினால் பெறுமதியான ஆதனங்கள் மற்றும் காணிகளை இழக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுடன் தமது ஒரே ஆதனத்தை இழந்ததனால் நடுத்தெருவில் நிற்க வேண்டிய நிலைமையும் ஏற்படுகின்றது. குறிப்பாக உறுதியில் அடங்கியிருக்கக்கூடிய நியதி நிபந்தனைகளை சாதாரண மக்கள் அறியாதிருப்பது இத்தகைய நிலைமைகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

இப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகளைக் காணவும், நிவர்த்தி அளிக்கவும் கூடிய நிலையிலுள்ள இந்த அரசாங்கத்துறை நிறுவனம் 1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டது.

1999 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கத் திருத்தத்தின்படி கடன் கொடுக்கல் வாங்கலொன்றுக்காக நிபந்தனையுடனான உறுதியொன்றின் மீது செய்யப்பட்ட கைமாற்றங்கள் தொடர்பாகவும் இத் திணைக்களத்திற்கு தலையிட்டு கடனாளிக்கு நிவாரணமொன்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இவ்விடயத்தில் இக் கடன் உண்மையாகவே கடனாகவே பொறுப்பொன்று அல்லது பிணைப் பொறுப்பாக செய்யப்பட்ட கைமாற்றமொன்றென கடனாளியினால் சான்றுகளுடன் சபைக்கு நிருபிக்கப்பட வேண்டுமென்பதுடன் கைமாற்றஞ் செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் விஞ்சப்படுவதற்கு முன்னர் விண்ணப்பம் சபையிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது.

நிவாரணத்திற்கு எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டுமென்பது :

அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அவசியமான எல்லாத் தகவலுடனும் சேர்த்து இத் திணைக்களத்தினால் இலவசமாக வழங்கப்படுகின்றன. இவ் விண்ணப்பங்கள் கொழும்பு 08, ஆசார்ய என். எம். பெரேரா மாவத்தை, இல. 35ஏ என்னும் இடத்திலுள்ள கடன் இணக்க சபைத் திணைக்களச் செயலாளரிடமிருந்து, அல்லது அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரடியாக அவரது அலுவலகத்திற்குச் செல்வதன் மூலமாகவோ பெறப்படலாம். கடன் சம்பந்தப்பட்ட உறுதியின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று விண்ணப்பத்துடன் கட்டாயமாகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். நிபந்தனையுடனான கைமாற்றங்களுடன் ஈட்டு முறிகளும் தொடர்பிலான விண்ணப்பங்கள் முறையே நிபந்தனையுடனான கைமாற்றும் முடிவுறும் தேதிக்கு முன்னர் அல்லது சட்ட நீதிமன்றமொன்றில் எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படு முன்னர் சபைக்குச் செய்யப்படுதல் வேண்டும். 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடனை மீள அளவீட செய்யப்படும் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்திற்கமைய கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட கடன்கள் தொடர்பாக தலையிடுவதற்கு இச் சபைக்குத் தத்துவங்கள் இல்லை.

விண்ணப்பமொன்று பெறப்பட்டதடன் பின்னர் திணைக்களத்தினால் பின்பற்றப்படும் நடவடிக்கை முறை

01. திணைக்களத்துக்குக் கிடைக்கும் ஒவ்வொரு விண்ணப்பத்தையும் கிடைக்கப் பெறுகின்ற தேதியின்படி பதிவு செய்து சம்பந்தப்பட்ட விண்ண்பபதாரருக்கு அவ் விண்ணப்பத்திற்கான விண்ணப்ப இலக்கத்தைத் தாமதமின்றி அறிவித்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். விசாரணைகள் தொடர்பாக கிடைக்கப்பெறும் எல்லாக் கடிதங்களுக்கும் அன்றைய தினம் அல்லது மறுநாள் திரும்பும் அஞ்சலில் விபரங்களை அறிவித்து அனுப்புவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

02. சபையின் அங்கீகாரம பெறப்பட்டதன் பின்னர் காணி பதிவுசெய்யும் செயலாளருக்கும் சம்பந்தப்பட்ட கடன் கொடுத்தவருக்கும் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தடைக் கட்டளைகள் வழங்கப்படுவதும் சம்பந்தப்பட்ட விண்ணப்பகாரரை பூர்வாங்க விசாரிப்புக்காக சமூகமளிக்குமாறும் அறிவித்து அறிவித்தலொன்று அனுப்பப்படும். கைமாற்ற உறுதியொன்றைப் பற்றிய விண்ணப்பமொன்றாயின் சபையின் கட்டளையொன்றின்மேல் சம்பந்தப்பட்ட விண்ண்பபதாரருக்கு பூர்வாங்க விசாரிப்புக்காக சமூகமளிக்குமாறு அறிவித்து அறிவித்தலொன்றை மாத்திரமே அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

03. பூர்வாங்க விசாரிப்பு நடாத்தப்படுகின்ற தினத்தில் நிபந்தனையுடனான கைமாற்றம் அல்லது அடைமான உறுதியொன்று தொடர்பான விண்ணப்பமொன்றாயின் சபையின் கட்டளையின் படி இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் தகவல்களை வெளியிடுதல், கைமாற்றல் உறுதியொன்று தொடர்பான விண்ணப்பமொன்றாயின் இறுதி விசாரிப்புக்காக அடுத்த தேதியில் வருமாறு அறிவித்து சம்பந்தப்பட்ட பிரதிவாதிக்கு அறிவித்தலொன்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வர்த்தமானப் பத்திரிகையில் அத் தகவல்கள் வெளியிடப்பட்டதன் பின்னர் இரு கட்சிக்காரர்களும் அழைக்கப்பட்டு இறுதி விசாரிப்பை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இவ் வேளையில் இரு கட்சிக்காரர்களினதும் இணக்கத்துடன் சமாதான உடன்படிக்கையொன்றை ஏற்படுத்துவதற்கு

அல்லது ஏற்புடையதான வகையில் சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கைமாற்ற உறுதிகள் தொடர்பான விண்ணப்பமொன்றாயின் சட்டத்தின் பொருள் கோடலுக்கமைய கடனாகக் கருதப்படுமாயின் 1999 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

04. சமாதான உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்பட்டதன் பின்னர் பணம் செலுத்துதல் பற்றிய வசதியின்மைகள் அல்லது கஷ்டங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கடனாளியினது அல்லது கடன் கொடுத்தவரினது வேண்டுகோளின்படி மீண்டும் ஒரு முறை மாத்திரம் சம்பந்தப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய மீளாய்வு விசாரிப்பொன்றை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

05. சபையின் முன் விசாரிப்புச் செய்யப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்ட சில தீர்ப்புக்கள் அமுல்படும்போது ஏற்படுகின்ற சிக்கல்கள் தொடர்பாக வேறு நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுக்கப்படும்போது அவ் வழக்குகள் விசாரணை செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அது தொடர்பாக சாட்சியங்களைப் பெற்றுக் கொள்வதற்காக திணைக்களத்துக்கு அறிவித்தல்கள் கிடைக்கும் வேளைகளில் சாட்சியங்களை அளிப்பதற்காக திணைக்களம் முன்வருகிறது.

06. சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களினது வேண்டுகோளின்படி சபையின் முன் விசாரிப்புச் செய்யப்படுகின்ற வழக்குகள் தொடர்பான தீர்ப்புக்கள் மற்றும் சட்ட நடவடிக்கை குறிப்புகளின் பிரதிகள் குறித்த கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

## கடனைக் கொடுத்துத் தீர்க்கும் விதம்

கடன் கொடுத்தவரும் கடனாளியும் இறுதி விசாரிப்பொன்றுக்கு அழைக்கப்படுவர். இவ்விசாரிப்பு ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட சபை முன்னர் நடைபெறும். இரு திறத்தவர்களினதும் கூற்றுக்களைக் கவனமாகக் கேட்ட பின்னர் சபையானது கடனாளிக்கு கடனைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான இலகுவான தவணைப் பணங்கள் என்ற வகையாகப் போதிய நிவாரணம் அளிக்கப்படுகிறது. சபையானது ஒவ்வொரு விண்ணப்பத்தையும் அவ்வவற்றின் குணநலன்களின் மீதே கவனத்துட்கொள்கிறது என்பதுடன், விடயத்தின் சூழ்நிலைகளுக்கும் திறத்தவர்களின் சமூக, பொருளாதார நிலைமைகளுக்கும் முக்கிய கவனம் செலுத்திய பின்னர், இரு திறத்தவர்களுக்கும் நியாயமானதும் அவர்களினால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதுமான கொடுத்துத் தீர்க்கும் வழியொன்றைக் கூறுகிறது. கடன்கள் எவையும் அல்லது வேறு நிதியுதவி எதுவும் சபையினால் வழங்கப்படமாட்டாது.

ஒரு விண்ணப்பத்தின் மீதான முடிவைச் செய்கையில் சபையானது பின்வரும் அம்சங்களுக்குக் கவனம் செலுத்துகிறது (சட்டத்தின் 21 ஆம் பிரிவு)

(அ) கடனாளியினால் பெறப்பட்ட அல்லது பெற்றுக் கொள்ளப்பட்ட கடனின் திட்டகிட்டமான தொகை

(ஆ) கடனோடு இணைந்துள்ள வட்டி நியாயமானதா என்பது :

(இ) கடன் தொடர்பில் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட வட்டி வீதம்:

(ஈ) வட்டியாக அல்லது வேறு இறுப்பனவுகளாக ஏலவே செலுத்தப்பட்டுள்ள மொத்தத் தொகை

(உ) கடன் எந்த விசேட நிபந்தனைகளின்மீது வழங்கப்பட்டுள்ளது:

(ஊ) கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு கடனாளிக்குள்ள இயலுமாந் தன்மை :

(எ) கவனத்திற்குக் கொள்ளப்படக்கூடியதென சபையினால் கருதப்படுகின்ற வேறு விடயங்கள்

நியாயமான நடுத்தீர்ப்பொன்றின்போது கடன்கொடுத்தவர் மறுக்கும்போது பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை:

சபையினாற் கூறப்பட்ட நீதியானதும் நியாயமானதுமான ஆலோசனையொன்றை ஏற்றுக் கொள்வதற்குக் கடன் கொடுத்தவர் மறுக்கும் பட்சத்தில் அப்பொருள்பட சான்றிதழொன்று கடனாளிக்கு வழங்கப்படுகிறது. (32(2) ஆம் பிரிவின்படி) இதே போன்று, கடன் கொடுத்தவர் தமக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டபின்னர் இறுதி விசாரிப்பில் சமூகமளிப்பதற்குத் தவறின், மறுகட்சிக்காரரில்லாமல் விசாரிப்பொன்று நடாத்தப்பட்டு கடனாளிக்கு அப்பொருள்பட சான்றிதழொன்று வழங்கப்படுகிறது. (29 ஆம் பிரிவின்படி) ஆனால் இது விடயத்துக்கேற்ப, பதிவஞ்சல் மூலம் அல்லது அந்த இடப்பரப்புக்கான கிராம சேவை அலுவலர் மூலம் கடன் கொடுத்தவருக்கு அறிவித்தல் அனுப்பிய பின்னர் மட்டுமே அத்துடன் கடன் கொடுத்தவர் விசாரிப்புக்குத் தொன்றத் தவறியுள்ளாரெனச் சபை திருப்திப்பட்ட பின்னரே செய்யப்படுகிறது. அத்தகையதொரு சான்றிதழின் நன்மை கடனாளிக்கு முழுமையாகச் செல்கின்றது. ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் அத்தகைதொரு சான்றிதழ் அவரினால் நீதிமன்றத்தின் முன்னர் காண்பிக்கப்படுமிடத்து, கடனாளி தனது கடனைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு 10 ஆண்டு காலப் பகுதிவரை அளிப்பதற்கும், வட்டி வீதத்தை ஆகக் குறைந்த அளவு குறைப்பதற்கும் கடனாளியிடமிருந்து எவையேனும் செலவு தொகைகளை அறவிடாதிருப்பதற்கும் கட்டளையிடுவதற்கும் நீதிமன்றமானது கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின்கீழ் நீதிமன்ற தத்துவங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

சபையினால் அளிக்கப்படும் நிவாரணங்கள்

பிரதானமாக மேற்குறித்த நிவாரணச் செயற்பாடுகளை அமுல்படுத்தும்போது மேலும் பொது மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் சபை செயல்படுகிறது. ஏதேனும் ஆதனம் தொடர்பில் சட்ட நீதிமன்றமொன்றில் வழக்கொன்று தொடுகசுப்படும்போது, சம்பந்தப்பட்ட ஆதனத்தின் பெறுமதிக்கு விகிதாசாரமாக முத்திரை கட்டணம் செலுத்த வேண்டியிருப்பினும் சபையின் நடவடிக்கைகளுக்கு முத்திரைக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்படுகிறது. அறிவித்தல்களைச் சேர்ப்பிப்பதற்கான செலவாக நாற்பது ரூபாக் கட்டணமும் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டிய அறிவித்தல்களுக்கான கட்டணங்கள் மற்றும் அறிவித்தல்களுக்காக கடன் தொகைக்கு நேரொத்தவாறு சிறு பணத் தொகையொன்று மாத்திரமே அறவிடப்படுகிறது. தனது சார்பில் சபையின் முன்னிலையில் தானே விடயங்களை எடுத்துக்கூற முடியுமென்பதுடன் சட்டத்தரணி உதவிகளைப் பெற்றுக் கொள்வது கட்டாயமானதல்ல. ஆனால் சிக்கலான சட்டப் பிரச்சினைகளை உட்படுத்தியுள்ள வழக்குகளில், விசேடமாக உறுதிகள் முதலியன தொடர்பில், இரு திறத்தவர்களும் அவ்வாறு விரும்பின், சட்டத்தரணிமாரை அமர்த்துவதற்கான விருப்பத்தெரிவு அவர்களுக்குண்டு.

தீர்த்துவைத்தலொன்றை பயனுறுவதில், கடனைச் செலுத்துவதற்குக் கடனாளியின் இயலுமாந் தன்மையைப் பொறுத்து, கடனை இலகுவான மாதாந்த தவணைப் பணங்களிலும் மிக்க நியாயமான வட்டி வீதத்திலும் திருப்பிக் கொடுப்பதற்கான சலுகையைக் கடனாளி பெறுகின்றார். நிபந்தனையுடனான கைமாற்றலின் விடயத்தில், நிபந்தனையுடனான கைமாற்றத்தைச் சபையானது ஈடொன்றாக மாற்றுகிறது. இது ஒரு கடனாளிக்குத் திரளுகின்ற பெருமளவிலான நிவாரணமொன்றாகக் குறிப்பிடலாம். அ:தே போன்று

கைமாற்றல் உறுதிகளின்மீது செய்யப்பட்ட கடன்கள் தொடர்பில் தலையிடக்கூடியவாறு சட்டம் திருத்தஞ் செய்யப்பட்டமையும் கடனாளிக்கு பெருமளவிலான ஒரு நிவாரணமாகும்.

உங்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படும் ஒத்துழைப்பு

சபைக்கு ஒரு விண்ணப்பத்தைச் செய்யும்போது விண்ணப்பப் படிவத் தொகுதியுடன் சேர்த்து உங்களுக்கு வழங்கப்படும் அறிவுறுத்தல்களைத் தயவு செய்து கவனமாக வாசித்து, அத்தகைய அறிவுறுத்தல்களுக்கிணங்க படிவங்களைச் செம்மையாக நிரப்புங்கள். உங்களால் வழங்கப்படும் தகவலின் மீது சபை செயலாற்றுகின்றதாதலால் இது அதி முக்கியமானது. விண்ணப்பத்தோடு சேர்த்து, ஒன்றில் இயைபான உறுதியின் மூலப் பிரதியை அல்லது அதன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதியை நீங்கள் கொடுத்துதவினால் சபை விரைவாகச் செயலாற்றுவதனை இது இயலச் செய்யும். அதன் முடிவுறுத்தல் தேதிக்கு நேர்முன்னர் நிபந்தனையுடனான கைமாற்றமொன்று தொடர்பிலி விண்ணப்பமொன்று செய்யப்படக்கூடிய போதிலும் உங்கள் விண்ணப்பத்தை நேரகாலத்தோடு செய்வதன் மூலம் சபையின் நடவடிக்கைகளுக்கு நீங்கள் உதவி புரியலாம்.

செயலாளர்,
கடன் இணக்கச் சபைத் திணைக்களம்,
இல. 35ஏ, ஆசார்ய என். எம். பெரேரா மாவத்தை,
கொழும்பு 08.

தொலைபேசி இல. : **011 - 2697911**

தொலைநகல். : **011 - 2697911**